# சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத் தாவரங்கள்

# Weaving Land Plants in Sangam Literature

**முனைவர் கதி.முருகேசன்(கதிர்முருகு)**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**Dr. KT. Murugesan (Kathirmurugu)**
*Assistant Professor, Department of Tamil*
*Ganesar College of Arts and Science*
*Melaisivapuri*

**ஆய்வுச் சுருக்கம்**

*கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் என்று அழைக்கப்படுகிறது. நெய்தல் நிலப்பகுதி மிகுதியும் மென்மையான நில அமைப்பைக் கொண்டும் உப்புத்தன்மையைக் கொண்டும் விளங்குகிறது. உவர்நீர், கழிநீர், உப்புக்காற்று, வெப்பம் ஆகியவற்றை ஏற்று வாழும் வளரும் உயிர்ச் சூழல் நெய்தல் நிலத்தில் அமைந்திருக்கிறது. குறிப்பாக, கடற்கரைச் சூழலில் அடும்பு, தாழை, புன்னை, ஞாழல், பெண்ணை, முண்டகம், தில்லை, வேம்பு, செருந்தி முதலான தாவரங்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் புலவர்கள் இலக்கியத்தின் பின்னணி சிறக்கும் வகையில் தாவரவியல் சிந்தனைகளைப் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம்பண்டைய மக்கள் எவ்வாறு இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். தாவரங்கள் அவற்றின் பயன்பாடு குறித்த நுட்பங்களை எவ்வாறு அறிந்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது. தாவரங்களின் இலை, பூ, தண்டு, கிளை முதலான உறுப்புகள் குறித்துப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ள அடையாளங்கள் இன்றைய நிலையிலும் தாவரங்களை இனம் கண்டு பயன்கொள்ள உதவுகின்றன.*

***குறிப்புச் சொற்கள்:*** *புன்னை, அடும்பு, ஞாழல், தாழை, நெய்தல், செருந்தி, பெண்ணை, உப்பங்கழி, கடற்கரை, அலை, கடல் ஓதம்.*

**Abstract**

*The ocean and the oceanic region are called Nethal. The Neythal region is characterized by abundant soft soil texture and salinity. A growing ecosystem that thrives on back water, sewage, salt air, and heat is located in the Neidhal land. Especially, in the coastal environment, plants such as adumbu, thillai, punnai, gnalal, pennai, mundagam, neem, serundi etc. are found. In Sangam literature, poets have recorded botanical thoughts in hymns as a background to the literature. Through this how the ancient people lived a life in harmony with nature. It is possible to know how the plants knew the techniques of their use. The signs revealed by the poets about the salts of plants like leaf, flower, stem, branch etc. help in identification and utilization of plants even today.*

***Keywords:*** *Punnai, Adumbu, Gnalal, Thaazhai, Neidhal, pennai, Back Water lake, She Shore, Wave, Tide.*

**Citation**

Murugesan, KT. “Weaving Land Plants in Sangam Literature.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 29–35.

**முன்னுரை**

*பண்டைத் தமிழர்களின் நிலவியல் பாகுபாட்டில் நெய்தல் நிலம் "வருணன் மேய பெருமணல் உலகமும்" (தொல்.பொருள். அகத். 5:4) என்னும் தொல்காப்பியச் சூத்திர அடியால் கடல் சூழ்ந்த நிலத்திற்கு நெய்தல் நிலப்பெயர் என்பதையும் அதற்குரிய கடவுள் வருணன் என்பதையும் பதிவு செய்துள்ளது. நெய்தல் நிலம் மற்ற நிலங்களினும் மாறுபட்ட வாழ்வியல் சூழலைக் கொண்டு விளங்குகிறது. கடலை நம்பித் தொழில் செய்யும் மக்கள் வாழும் இடமாகவும் தாவரங்கள் மற்றும் பறவைகள் கடல் வாழ் உயிர்கள் எனப் பரந்துபட்ட உயிர்ச்சூழலைக் கொண்டு விளங்குகிறது. கடற்கரை உப்பங்கழி இரண்டும் தாவரவியல் மற்றும் உயிரியல் சூழலில் முக்கியப் பங்காற்றுகின்றன. உவர்நீர் உப்புக் காற்று முதலான இயற்கைக் கூறுகளை ஏற்று வாழும் வகையில் நெய்தல் சூழல் அமைகிறது. இவ்வடிப்படையில் நெய்தல் நிலத் தாவரச் சூழலை நோக்குவது அவசியம். நெய்தல் நிலத்தில் அந் நிலத்திற்கே உரிய சிறப்பான தாவரங்களும் பிற நிலங்களுக்குப் பொதுவான தாவரங்களும் வளர்கின்றன. இக்கட்டுரை சங்க இலக்கியத்தில் அமைந்துள்ள நெய்தல் பாடல்களில் அமைந்திருக்கும் தாவரவியல் சிந்தனைகளை ஆராய்கிறது.*

**நெய்தல்**

*கடற்கரை சார்ந்த பகுதியில் மிகுதியாகக் காணப்படும் தாவர வகை. மிகுதியாகக் காணப்படுதல் மற்றும் அதன் எழில் நோக்கி நெய்தல் நிலத்துக்குரிய குறியீடாக அமைத்திருக்கிறது. பி.எல். சாமி, "செடி நூலார்,* Nymphae Stellata *என்று பெயரிட்டு அழைப்பர். இதை அழகுக்காக வளர்ப்பதுண்டு. இதையே நீலோற்பலம் நீலம் கருநெய்தல் கருங்குவளை பாலை என்று பல பெயரால் மயங்கிக் கூறுவர். ஒரே இனமான* Nymphae Stellata *என்பதில் வெண்மை சிவப்பு நீலம் கருநீலம் ஆகிய நிறங்களுடைய பூக்கள் கொண்டவை என்று செடி நூல் கூறும். அதில் கருநீல நிறமுடையதையே நெய்தல் என்று சங்க நூல்கள் கூறுவதாகத் தெரிகிறது" (பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப.58) கு.சீனிவாசன், "நெய்தல் என்னும் நீர்க்கொடி தாமரை ஆம்பல் குவளை நீலம் கொட்டி முதலியவற்றுடன் சேர்ந்தும் தனித்தும் நன்னீர்நிலைகளிலும்சிற்றருவிகளிலும் உப்பங்கழியிலும் வளரும் இயல்பிற்று" (கு.சீநிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.43) என்று குறிப்பிடுகிறார். நெய்தல் நன்னீரிலும் வயல் வெளிகளிலும் மலர்கிறது. இதன் நிற அடிப்படையில் நீலமலர் என்னும் அழைக்கப்படுகிறது. நீரில் பூக்கும் நெய்தல் மலர் நீண்ட காம்பினையும் (குறிஞ்சிப்பாட்டு,79) வயல்வெளிகளில் மலரும் நெய்தல் குறுகிய காம்பையும் கொண்டது. (மேலது. 84) உப்பங்கழிகளிலும் நெய்தல் மலரும் என்பதை நெய்தல் திணைப் பாடல்களின் வழி அறியச் சான்றுகள் காணப்படுகின்றன. நறுமணம் கொண்ட இம்மலர் (ஐங். 182) சிறிய இதழ்களைக் கொண்டு விளங்குவதாகும் (நற்.239) திணைமொழி ஐம்பது நெய்தல் மலர்கள் மிகுதியாக மலர்ந்திருக்கும் பகுதியை நெய்தல் படப்பை என்று குறிப்பிடுகிறது. "நெய்தல் படப்பை நிறை கழித் தண்சேர்ப்பன்" (ஐந். ஐம்பது.41) மக்களின் வாழ்வோடு நெய்தல் மலர் இயைந்ததாகக் காணப்பட்டது. கண்ணியாகவும் (ஐங்.135) மாலையாகவும் (குறுந். 40) பயன்படுத்தும் வழக்கம் இருந்தது. காலை வேளையில் மலரும் நெய்தலைத் (ஐங். 188) தெய்வங்களுக்குச் சூட்டும் வழக்கம் இருந்தது (ஐங். 188) கடற்கரைக் கழியில் நெய்தல் மலர்ந்திருக்கும் காரணத்தால் கழியைச் சார்ந்து வளர்ந்த புன்னை மரத்தில் மலர்ந்த மலர்களில் இருந்து உதிர்ந்த மகரந்தம் நெய்தல் மலரில் படிந்திருக்கும் காட்சியை ஐங்குறுநூறு எடுத்துக்காட்டுகிறது (189) வயல் வெளிகளில் மலர்ந்திருக்கும் நெய்தல் மலர்களை எருமைகள் விரும்பித் தின்னும் காட்சி அகநானூற்றில் குறிப்பிடப்படுகிறது (100)*

**முண்டகம்**

*முண்டகம் கழிமுள்ளி என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. இதன் தாவரவியல் பெயர் அக்காந்தெஸ் இலிசிபோலியஸ் என்பதாகும். கு.சீநிவாசன் முள்ளியில் இருவகை இருப்பதாகக் குறிப்பிடுகிறார். ''முள்ளை உடையது முள்ளி என்றாலும் சங்க இலக்கியங்களில் இரு முள்ளிச் செடிகள் கூறப்படுகின்றன. ஒன்று மருத நிலத்து வயல் வரப்புகளிலும் வாய்க்கால் கரைகளிலும் காணப்படும் வலிய சிறு செடி. இதற்கு நீர்முள்ளி என்றும் முள்ளி என்னும் மீன் முள்ளி என்றும் பெயர்கள் உண்டு. மற்றொன்று கடலோரத்தில் மணல் மேடுகளிலும் உப்பங்கழியில் நீர்நிலைகளிலும் புதர் போன்று செழித்து வளரும் மிக வலிய பெருஞ்செடி. இதற்குக் கழி முள்ளி கழுதை முள்ளி என்னும் பெயர்களும் வழங்கப்படுகின்றன'' (கு.சீநிவாசன், முற்குறித்த நூல், ப.569) ''உ.வே.சாமிநாதையர் கழிமுள்ளி மலர் கருமை நிறம் உடையது என்று குறிப்பிடுகிறார்'' (உ.வே.சாமிநாதையர், குறுந்தொகை, பக். 48, 49) நற்றிணை மதுரைக் காஞ்சி ஆகிய இலக்கியங்கள் கழி முள்ளியை மணிப்பூ முண்டகம் (நற். 191:9; மதுரை. 96) என்று குறிப்பிடுகின்றன. கழிமுள்ளி கரு நீல நிறம் உடையது என்பதால் உ.வே.சாமி நாதையர் அதன் அடர் நீலத்தைக் குறித்துக் கருமை நிறம் எனக் கூறியிருப்பதற்கு வாய்ப்புண்டு. நெய்தலின் முதலாகிய செடி கத்தரி வகையுளொன்றாகிய முள்ளியின் வேறொன்றரிதற் பொருட்டுப் பெரும்பாலும் கழிமுள்ளியென்றே வழங்கப்படும். கடல் முள்ளியென்றும் அருகி வழங்கும். (இ.வை. அனந்தராமையர், நெய்தற்கலி ஆராய்ச்சிக் குறிப்புரை, பக்.827) என்று அனந்தராமையர் கூறும் கருத்து நீர் வளம் மிக்க இடங்களில் கழிமுள்ளி பொதுவாக வளரும் இயல்புடையது என்பதையும் உணர்த்துகிறது. கழிமுள்ளியின் வளைவும் கூர்மையும் உடையதாகக் காணப்படுவதால் கூர்மையான முள்ளுக்கு அணில் பல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது (குறுந். 51:1; 49:1) உப்பங்கழி ( ஐங். 108:1-2) கடற்கானல் முதலான இடங்களில் கழிமுள்ளி மலர்ந்து விளங்கியது. கழிமுள்ளி மலர்கள் தில்லை மலர்களுடன் கடற்கரை மணல்மேட்டில் பரவிக் கிடந்ததைக் கலித்தொகை பதிவு செய்துள்ளது (கலி. 133:1,2) பனிக்காற்றால் அலைக்கப்பட்ட கழிமுள்ளி மலர்கள் நூல் அறுந்த முத்து மாலையின் முத்துகளைப் போன்று மணல் வெளியில் சிதறிக் கிடந்ததாகக் குறுந்தொகை குறிப்பிடுகிறது (குறுந். 51:1-3) சூடத்தக்க மலராகவும் முள்ளி விளங்கியது (நற். 191:9-10) நெய்தல் நிலப் பெண்கள் கடலில் பந்தாடிய போது கழிமுள்ளி மலர்கள் கொண்டு கட்டப்பட்ட மாலை அணிந்திருந்ததைச் இலக்கியச் சான்றுகள் தெளிவுபடுத்தியுள்ளன (ஐங். 121:2 -3; நற்.245: 2 - 4)*

**ஞாழல்**

*ஞாழலின் தாவரப் பெயர் காசியா சொபியா என்பதாகும். ஞாழல் என்பது புலி நகக் கொன்றை என்றே பெரிதும் வழங்கப்பெறுகிறது. அதன் காய் நுனியிலே சற்று வளைந்து புலி நகம் போன்றிருத்தலின் இது புலிநகக் கொன்றை என்று அழைக்கப்படுகிறது. இது கொன்றை வகையைச் சேர்ந்தது. ஞாழலின் கிளைகள் கருமையானவை. பக்கவாட்டில் அடுக்கடுக்காய் உள்ள சின்னஞ்சிறு இலைக் கொத்துகளையுடையவை. மலர்கள் மிகச் சிறியவை பொன்னிறமானவை. நறுமணம் வீசுபவை'' (தி. முத்துக் கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், ப.56) ஞாழல் மரத்தின் கொம்புகள் அடிமரம் ஆகியன கருமை நிறமுடையவை (அகம்.240:1) கடற்கரை மணல் மேடுகளில் காணப்படும் ஞாழல் மரத்தின் இலைகள் சிறியவை. அரும்புகள் செம்மை தோய்ந்த பசுமை நிறம் உடையவை (ஐங். 145:1) மலர்கள் சிறியவை (நற்.31:5) பொன்னிறம் உடையவை (அகம். 70:8-9) மலர்கள் சிறியனவாகக் காணப்படுவதால் வெண் சிறு கடுகுக்கும் (குறுந். 50:1) ஆரல் மீன் முட்டைக்கும் (குறுந்.397:1)*

*ஒப்புமைகூறப்பட்டுள்ளன. மலர்கள் மணம் மிக்கவை (நற். 96:1; 106:7; 267:1-5; குறுந். 318:2; 310:6; ஐங். 150:1) கொத்தாக மலரும் இயல்புடையவை (நற். 191:1; குறுந். 397:1; ஐங். 142:1; பதிற். 30:1 கலி. 127:1) ஞாழல் விதை மிளகு போன்ற தோற்றமும் கசப்புச்சுவையும் உடையது என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார் (ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், ப.365) கடற்கரைச் சோலையில் வளரும் பல்வேறு மரங்களோடு ஞாழல் சேர்ந்து வளரும் இயல்புடையது. புன்னை, தாழை, ஞாழல் ஆகிய மரங்கள் கடற்கரைப் பகுதியில் செறிந்து காணப்பட்டதை அகநானூறு குறிப்பிடுகிறது (அகம். 180 : 10 - 15) அம் மரங்களிலிருந்து கடற்கரை மணல்வெளியில் மலர்கள் உதிர்ந்து கிடந்தன (குறுந்.397:1-3) புன்னை ஞாழல் மலர்கள் உதிர்ந்து கடற்கரை மணல் வெளி வெறியாடு களம் போலக் காணப்பட்டதைக் குறுந்தொகை விளக்குகிறது (318:1-3) நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பெண்கள் ஞாழல் மலர்களைக் கண்ணியாகக் கட்டிச் சூடிக்கொண்டதுடன் தளிர்களைக் கோத்துத் தழையாடையாகவும் உடுத்தினர் (ஐங். 147:1-2; 19:1-3; அகம்.370: 9-11; 20:5-6;: நற். 191: 1 - 4)*

**பெண்ணை**

*நெய்தல் நிலம் சார்ந்து வளரும் மரங்களில் குறிப்பிடத்தக்கது பனை. இது பெண்ணை (நற்.218: 11) போந்தை ( புறம். 85:7) என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறது. அடிமரம் பருத்தும் அகன்றும் காணப்பட்டது (நற்.218:11) மிகுதியான பனை மரங்கள் வளர்ந்திருந்த பகுதி படப்பை என்றும் அழைக்கப்பட்டது (நற். 38:9-10; அகம்.120:13) பனை மரங்களில் இருந்து கள் இறக்கப்பட்டது. இனிய சுவையுடைய கள்ளைப் பருகிப் பரதவர்கள் மகிழ்ந்திருந்தனர் (நற்.38:1-3) கடல் காற்று வீசுவதால் கடற்கரை மணல் காற்றில் குவிந்து மணல் மேட்டை உருவாக்கியது. இது எக்கர் என்று அழைக்கப்பட்டது. காற்றால் பனைமரத்தின் அடியில் மணல் மிகுதியாகக் குவிந்த காரணத்தால் மரம் உயரம் குறைந்து காணப்பட்ட காட்சியை நற்றிணை குறுந்தொகை ஆகியவற்றின் வழி அறியமுடிகிறது (நற். 199:1; குறுந்.248: 3 - 6) பனை மடல்கள் ஈர்க்குடன் அகன்றும் நீண்டும் காணப்படும். மடல்களின் கீழ்ப்புறம் கருக்குகள் காணப்படும். அதனை வெட்டி நீக்கிவிட்டுக் குடில்களுக்கு ஓலையை வேலியாக அமைக்கும் வழக்கம் நிலவியது (நற். 135:1-2; 154:1 - 4) பனை மரத்தின் அடி பொதுமக்கள் கூடும் மன்றங்களாகவும் (நற். 338: 8 - 9) தெய்வம் உறையும் இடங்களாகவும் விளங்கின (நற்.303:3-4) கடற்கரை உயிரியல் சூழலைப் பாதுகாக்கும் பனை மரங்களில் அன்றில் நாரை குருகு முதலான பறவைகள் கூடு கட்டி வாழ்ந்தன (குறுந்.177:3-4; ஐங். 114:3-4; அகம். 50:10-12)*

**தாழை**

*நெய்தல் நிலப் புதர்த் தாவரமான தாழை கண்டல், கைதை என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. தாழை புல்வகை சார்ந்தது. தாழை குறித்து தி.முத்துக் கண்ணப்பன் "தாழை புறக்காழுடையது. ஆதலால் அது புல்வகையினைச் சார்ந்ததாகவே கருதப்படுகிறது. இது கடல் ஓரத்திலும் கழியோரத்திலும் அடர்ந்து மதர்த்துச் செழித்து வளர்ந்திருக்கும். அடிமரம் வளைந்து சருச்சரையுடையதாகவும் வெளுத்துத் திரைத்த மெல்லிய தோல் போர்த்தியதாகவும் காணப்படும். இலைகள் கொத்துகளாக மேலெழும்பிப் பரவி வளைந்து தோன்றும் அவை நீளமாகவும் இரு விளிம்புகளிலும் நடு நரம்பிலும் கூரிய சிறு முட்களை உடையனவாகவும் இருக்கும்" (தி.முத்துக் கண்ணப்பன், முற்குறித்த நூல், ப.38) மேலும் இ.வை.அனந்தராமையரின் கருத்துகளை எடுத்துக்காட்டி "தாழையில் ஆணென்றும் பெண்ணென்றும் உலக வழக்கில் இரு*

*பிரிவுளது. ஆண் தாழை காய்க்கும் பெண் தாழை காயாது (மேலது. 38) என்றும் குறிப்பிடுகிறார். தாழையின் அடிமரம் சொரசொரப்புடைய செதில்களை உடையதாகவும் பருத்தும் காணப்பட்டது. நீண்ட இலைகள் இருபுறங்களிலும் பெரிய முட்களைக் கொண்டு விளங்கின. அரும்பு தந்தத்தை ஒத்துக் காணப்பட்டது (நற். 19:1-4) மீன்களாலும் கடல் வாழ் உயிர்களாலும் புலால் நாறும் கடற்கரைப் பகுதியில் தாழை நன்மணத்தால் நாற்றம் போக்கியதைப் பாடல்கள் பதிவு செய்துள்ளன.(நற். 49:9; 78:4; 235:2-4) தாழையின் விழுதுகளைக் கொண்டு கயிறாக்கிப் பரதவப் பெண்கள் கடற்கரைச் சோலையில் ஊஞ்சலாடும் காட்சியை அகநானூறு பதிவு செய்துள்ளது (அகம். 2015-6) கடற்கரை ஊர்களுக்குத் தாழை மரங்கள் இயற்கையாக வேலியாக விளங்கின (குறுந்.245:3-4)*

**அடும்பு**

*நெய்தல் நிலம் சார்ந்து வளரும் கொடி வகைத் தாவரம் (பதிற். 30:4-6; நற்.145:1) ஐபோமியா பெஸ் காப்ரே என்பது அரும்பின் தாவரவியல் பெயர். ஆங்கிலத்தில்* Goats foot Creeper *ஆட்டுக் குளம்புக்கொடி (கு. சீநிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.518) என்று அழைக்கப்படுகிறது. அடும்பின் கவைத்த இலையின் காரணமாகவே இதற்குச் செடி நூற் பெயரில்* (Bilobia) *என்ற சொல் வழங்கி வருகிறது (பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப.135) அடுப்பம்பூ என்று நச்சினார்க்கினியர் கூறுவதாக கு.சீ நிவாசன் குறிப்பிடுவர் (கு. சீநிவாசன், முற்குறித்த நூல், ப.518) கடற்கரை மணலில் படரும் இக்கொடி செம்மை நிறமானது பிளவுபட்ட இலைகளை உடையது (அகம். 80: 8 - 9) இலைகள் பிளவுபட்டு மான் குளம்பு போன்று விளங்கும் காரணத்தால் மான் அடிக்கு ஒப்புமை கூறப்படுகிறது. மானடி யன்ன கவட்டிலை அடும்பின் (குறுந்.243)*

**தில்லை**

*நெய்தல் நில மரம். அனந்தராமையர் கருத்து இதனை உறுதிப்படுத்தும். இது (தில்லை.நெய்தல் நிலத்துக்கு உரியதாகக் கூறப்படும் மரவகை. இதன் தளிர் புற்கென்ற நிறமுடையதென்பதும். பன்முறை அருவி நீராடும் தாபதர் சடையின் நிறத்துக்கு உவமை கூறப்பெறுவதென்பதும் அறியப்படுகின்றன. இதன் பால் மிகக் கொடுமைத்தன்மை உடையதென்பர் (இ.வை. அனந்தராமையர் , கலித்தொகை, நெய்தற்கலி) தில்லை மரம் கள்ளி வகையைச் சார்ந்தது. அடி மரம் பொந்துகளை உடையதாகக் காணப்படும் என்றும் நீர் நாயின் குட்டி தில்லை மரப் பொந்துகளில் துயில் கொள்ளும் என்பதையும் நற்றிணை குறிப்பிடுகிறது (நற். 195 :1-4) மாமலர் முண்டகம் தில்லையொடு ஒருங்குடன் / கானல் அணிந்த உயர் மணல் எக்கர் (கலி.133:1-2) அடிகளால் கடற்கரைப் பகுதியில் கழிமுள்ளியும் தில்லை மரமும் ஒன்றாக வளர்ந்திருக்கும் காட்சி எடுத்துக்காட்டப்படுகிறது. தில்லை மரங்கள் ஊருக்கு இயற்கை வேலியாக அமைந்திருந்தமை தில்லை வேலி இவ்வூர் (ஐங். 131:2) என்னும் சான்றால் விளக்கப்படுகிறது.*

**செருந்தி**

*செருந்தி என்பதன் தாவரவியல் பெயர் ஆக்னா ஸ்குவரோசா என்பதாகும். கடற்கரை மணல் வெளி சார்ந்த உப்பங்கழிகள் மணல்மேடுகள் முதலான இடங்களில் நெய்தல், குவளை, புன்னை முதலான தாவரங்களின் மலர்கள் காற்றால் எல்லா இடங்களிலும் பரவிக் கிடந்த காட்சியைப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. செருந்தி ஞாழல் இவற்றின் மலர்கள் கடற்கரைச்*

*சோலையில் மணம் கமழ்வதை ஐங்குறுநூறு பதிவு செய்துள்ளது (ஐங். 141:1-2) செருந்தி இலைகள் பசுமை நிறமுடையவை (மேலது.112:1-2) காலையில் மலரும் இயல்புடையவை (அகம்.150:8-11) மலர்கள் பொன் போன்ற நிறத்தில் காணப்பட்டன (மேலது.280:1-2) பூக்களை வண்டுகள் கிண்டுவதனால் செருந்தி முதலான மலர்களின் மணம் காற்றில் கலந்தது (மேலது. 240: 12 - 14)*

**புன்னை**

*நெய்தல் நிலச் சூழலை ஏற்று வளரும் தாவர இனங்களில் குறிப்பிடத்தக்கது புன்னை. மரத்தின் உறுப்புகளான அடிமரம் கிளைகள் கொம்புகள் கருமை நிறம் உடையவை. நீ நிறப் புன்னை (நற்.163:8) கருங்கோட்டுப் புன்னை(மேலது. 67:5) இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை (மேலது. 243:1) என்னும் சான்றுகளும் மேற்கண்ட கருத்துக்கு வலுச் சேர்க்கும். புன்னையின் அடிமரம் பருமனானது. இதனை, பெருந்தாள் புன்னை (நற். 87:6) பராரைப் புன்னை (மேலது. 45: 9) என்னும் சான்றுகள் விளக்கும். புன்னை இலை, அரும்பு, மொட்டு முதலான உறுப்புகள் குறித்து தி.முத்துக் கண்ணப்பன் கருத்துகள் கருத்தில் கொள்ளத்தக்கவை. "இதன் (புன்னை) இலை கரும் பசுமை நிறமுடையது. அகன்றது. மலர் கொத்துக் கொத்தாக இருக்கும். அரும்புகள் வெண்மையானவை. மகரந்தம் பொன்னிறமானது. இதன் அரும்புகள் நீண்ட காம்புகளையும் உருண்ட வடிவினையும் உடையன. முத்துப்போல் தோற்றமுடையன. அரும்புகள் மலர்ந்து நறுமணம் வீசும் இதன் பொன்னிறத் தாது உதிர்ந்து வெண்மணல் பரப்பெங்கும் பொலிவூட்டும்" (தி.முத்துக் கண்ணப்பன், முற்குறித்த நூல், ப.46) நெய்தல் நிலச் சூழலியலில் புன்னைமரம் மக்களின் வாழ்வுடன் நெருங்கிய உறவினைப் பெற்று விளங்கியது என்பதை இலக்கியச் சான்றுகள் தெளிவாக்குகின்றன. கடற்கரைச் சோலை, வீட்டின் முற்றம், மக்கள் கூடும் பொது மன்றங்கள் முதலான இடங்களில் புன்னை மரங்கள் நிறைந்து காணப்பட்டன (நற். 49:8-10) புன்னை, தாழை முதலான மலர்கள் ஒருங்கே மலர்ந்து கடற்கரைப் பகுதியில் மணம் தந்ததை நற்றிணை குறிப்பிடுகிறது (235: 1 - 4) மரத்தில் இருந்து உதிரும் மகரந்தத் துகள்கள் சிப்பிகளின் முதுகில் வீழ்ந்து பொன்னிறம் பெற்று விளங்கியமைக்கு அகநானூறு சான்றாகிறது (260:8 - 9) புன்னை அடர்ந்து வளரும் காரணத்தால் மிகுதியான நிழலுடன் விளங்கியதை அறிந்து கொள்ள இலக்கியச் சான்றுகள் உதவுகின்றன. "வீயுகப்புன்னை பூத்த இன்னிழல் உயர் கரை (நற். 91:1-2) இருள் திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல் / நிலவுக் குவிந்தன்ன வெண்மணல் ஒரு சிறைக் / கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் (குறுந்.123:1-3) அடர்ந்து வளர்ந்த புன்னை மரம் கடற்கரையில் இரை தேடும் பறவைகளுக்கு வாழிடமாக விளங்கியது. புதிய நாரைகள் புன்னை மரத்தில் தங்கியிருந்ததையும் (குறுந். 236:3-5) மீன்களை உண்ட நாரை புன்னை மரத்தில் தங்கியிருந்து மாற்று இடம் தேடிப் பறந்து சென்ற காட்சியையும் (மேலது. 296:2-5) குறுந்தொகை பதிவு செய்துள்ளது. புன்னைமரம் பரதவர்களின் வாழ்வில் ஒரு பகுதியாக விளங்கியது. அவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று மீண்டு வந்து புன்னையின் நிழலில் வலைகளை உலர்த்தினர். உறவுகளுடன் கள் உண்டு மகிழ்ந்தனர். விற்பனை செய்தது போக எஞ்சிய மீன்களை உலர்த்தும் இடமாகவும் புன்னை மர நிழல் விளங்கியது.*

**முடிவுரை**

*கடல், கடற்கரை, உப்பங்கழி சார்ந்து வளரும் இயல்புடைய நெய்தல் நிலத் தாவரங்கள் நெய்தல் நிலச் சூழலில் குறிப்பிடத்தக்க இடம் வகித்தன. நீர்வாழ் உயிர்களை மையமாகக் கொண்டு பரதவர் வாழ்வியலும் பறவைகள் வாழ்வியலும் அமைந்தன. பறவைகளின் வாழிடமாகவும்*

*இனப்பெருக்கம் செய்யும் இடமாகவும் கடற்கரைச் சூழலில் உள்ள தாவரங்கள் விளங்கின. மக்களின் வாழ்வியல் பண்பாட்டு முறைமைகள் நெய்தல் நிலத் தாவரங்களை மையமிட்டனமாக வாழ்வோடு ஒன்றியனவாக விளங்கின. புன்னை, தாழை, ஞாழல், செருந்தி, தில்லை, முதலான தாவரங்களின் அமைப்புக் குறித்து அறிந்து கொள்ள இலக்கியப் பதிவுகள் பயன்படுகின்றன.*

**துணை நூல் பட்டியல்**


1. அகநானூறு மூலமும் உரையும், சென்னை: என்.சி.பி.எச், 2004
2. அனந்தராமையர் , இ.வை, கலித்தொகை (நெய்தற்கலி) நோபிள் அச்சுக் கூடம், 1931
3. இளம்பூரணர் , தொல்காப்பியம், பொருளதிகாரம்,சென்னை: கழகம், 1967
4. ஐங்குறுநூறு மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச், 2004
5. ஐந்திணை ஐம்பது மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம், 2007
6. கதிர் முருகு, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம் 2009
7. கலித்தொகை மூலமும் உரையும் , சென்னை: என்.சி.பி.எச், 2004
8. குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை: என்.சி.பி.எச். 2004
9. சாமி, பி.எல், சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சென்னை: கழக வெளியீடு, 1967
10. சீநிவாசன், கு, சங்க இலக்கியத் தாவரங்கள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1987
11. தொல்காப்பியம், பொருளதிகாரம், சென்னை: கழகம், 1965
12. நாராயணசாமி பின்னத்தூர், நற்றிணை மூலமும் உரையும், சென்னை: கழகம், 2007
13. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சென்னை: என்.சி.பி.எச், 2004
14. முத்துக் கண்ணப்பன் தி, சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், சென்னை: அதிபத்தர் பதிப்பகம்,1978.


## References


1. Agananuru Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
2. Anandharamaaiyar, I.V, Kalithogai, Neidhal Kali, Chennai: Noble Press, 1931
3. Ilampooranar, Tholkappiyam, porulathikaram, Chennai: Kazhagam, 1967
4. Aingurunooru Moolamum uraiyum, Chennai: NCBH, 2004
5. Aindhinai Aimbadhu Moolamum Uraiyum, Chennai: Saradha Padhippagam, 2007
6. Kathir Murugu, patthu Pattu Moolamum uraiyum, Chennai: Saradha Padhippagam, 2009
7. Kalithogai Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
8. Kurundhogai Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
9. Samy, B.L, Sanga Ilakiyathil Sedi Kodi Vilakkam, Chennai: Kazhagam, 1967
10. Srinivasan K , Sanga Ilakiya Thavarangal, Thanjavur: Tamil university, 1987
11. Tholkappiyam poruladhikaram , Chennai: Kazhagam, 1965
12. Narayanasamy, pinnathur, Natrinai Moolamum Uraiyum, Chennai: Kazhagam, 2007
13. Pathitru Patthu Moolamum Uraiyum, Chennai, NCBH, 2004
14. Muthu Kannappan, T, Sanga Ilakiyathil Neidhal Nilam, Chennai: Adhipathar Padhippagam, 1978.